**திருநெல்வேலி, மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**முன்னிலை: திரு எம்.ஜி.குழந்தைவேல், எம்.ஏ.,**

**ந.க.எண்.ண4/23719/2014** **நாள்: 10.10.2014**

பொருள் - உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணயச்சட்டம்-2006 திருநெல்வேலி மாவட்டம்- வீ.கே.புரம் அம்பலவாண புரத்தில் செல்வஜோதி ஸ்டோர் நடத்திவரும் திரு செ.லாசர் (உரிமதாரர்)கடையிலிருந்து தரம் குறைந்த உணவுப் பொருள் கைப்பற்றப்பட்டது- ரூ.3,00,000/- அபராதம் விதித்து ஆணையிடப்படுகிறது.

பார்வை - 1)திருநெல்வேலி, மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிபதி முன்பாக திரு ந.முஹம்மது இஸ்மாயில் காசிம், உணவுப் பாதுகாப்பு அலுவலர், வீ.கே.புரம், தாக்கல் செய்துள்ள குற்றப்பத்திரிக்கை நாள்: 16.06.2014

--------------------

**உத்திரவு:**

பார்வையில் காணும் கடிதத்தில் உணவுப் பாதுகாப்பு அலுவலர், வீ.கே.புரம் என்பவர் திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், வீ.கே.புரம், அம்பலவாண புரம், 18.பி.மெயின்ரோடு என்ற முகவரியில் செல்வஜோதி ஸ்டோர்ஸ் நடத்திவரும் திரு செ.லாசர், உரிமதாரர் என்பவரின் கடையிலிருந்து 19.03.2014அன்று விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ஷண்முகா நல்லெண்ணெயை உணவு மாதிரி எடுத்து ஆய்வு செய்த போது பாமாயில் கலப்படம் செய்து விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தரம் குறைவான (ஷண்முகா) நல்லெண்ணெய் விற்பனை செய்த விற்பனையாளர் திரு.செல்வராஜ், விற்பனைக்காக கடையில் வைத்திருந்த கடை உரிமையாளர் திரு செ.லாசர் மற்றும் மேற்படி தரம் குறைந்த நல்லெண்ணெய் பாக்கெட் தயாரிப்பாளர் திரு ஆர்.சந்திரமோகன் என்பவர் மீது உணவுப்பாதுகாப்பு மற்றும் தரச்சட்டம்-2006 சட்டப்பிரிவுகள் 3(1)(zx), 26(1), 26(2)(ii), 26(2)(v), 27(3)(b), 27(3)(d) and 48(1)(a) மற்றும் 2011வது வருட உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் (உணவுப் பொருள் தரங்கள் மற்றும் உணவு சேர்பொருள்) ஒழுங்குமுறைகள் விதி 2.2.1(12) ஆகிய பிரிவுகள் மற்றும் ஒழுங்குமுறையை மீறியுள்ளார் என்பதால், மேற்படியார்கள் மீது உணவுப்பாதுகாப்பு மற்றும் தரச்சட்டம்-2006ன் கீழ் நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. தரம் குறைவான நல்லெண்ணெய் கைப்பற்றப்பட்டது தொடர்பாக கடையின் விற்பனையாளர், திரு செல்வராஜ், கடை உரிமையாளர் திரு செ.லாசர் மற்றும் தயாரிப்பாளர் திரு ஆர்.சந்திரமோகன் ஆகியோரை 08.09.2014

அன்று திருநெல்வேலி, மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களால் இறுதிக்கட்ட விசாரணைக்கு அழைப்பு அனுப்பப்பட்டது.

திருநெல்வேலி, மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்கள் முன்பாக 08.09.2014 அன்று தயாரிப்பாளர் திரு சந்திரமோகன், கடையின் உரிமையாளர் திரு செ.லாசர் மற்றும் விற்பனையாளர் திரு செல்வராஜ் ஆகியோர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர். இவர்களுடன் திரு ந.முஹம்மது இஸ்மாயில் காசிம், வீ.கே.புரம், உணவுப் பாதுகாப்பு அலுவலரும் விசாரணையின்போது ஆஜரானார்.

1)திரு ரா.சந்திரமோகன், த/பெ.ராஜாராம் என்பவரின் வாக்குமூலம் (3வது எதிரி):

மதுரை மாவட்டத்தைச் சார்ந்த தயாரிப்பாளர் திரு.சந்திரமோகன் என்பவர் சுமார் 6மாத காலமாக ஷண்முகா நல்லெண்ணெய் பாக்கெட்டாக தயார் செய்து, விற்பனை செய்து வருவதாகவும், மேற்படி எண்ணெய் பாக்கெட்டுகளில் இது சமையலுக்கு உகந்ததல்ல, தீப எண்ணெய் என அச்சடிக்கப்பட்டுள்ளதாகவும், கடைக்காரர் எவ்வாறு விற்றார் என்ற விபரம் தனக்குத்தெரியாது எனவும், வரும் காலங்களில் இதுபோன்ற தவறு நிகழாவண்ணம் பார்த்துக் கொள்வதாகவும் தெரிவித்து குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்.

2)திரு செ.லாசர், த/பெ.செல்லத்துரை என்பவரின் வாக்குமூலம் (2வது எதிரி):

கடை உரிமையாளர், திரு செ.லாசர், த/பெ.செல்லத்துரை என்பவர், தான் வீ.கே.புரம் கிராமம், அம்பலவாணபுரத்தில் சுமார் 15 வருடங்களாக மளிகைக் கடை நடத்தி வருவதாகவும், ஷண்முகா நல்லெண்ணெய் பாக்கெட்டுகளை விற்பனை செய்யும் போது தீபத்திற்கு மட்டும் பயன்படுத்தவும் என பொதுமக்களிடம் கூறி விற்பனை செய்ததாகவும், மேற்படி நல்லெண்ணெயில் கலப்படம் இருப்பது தனக்குத் தெரியாது எனவும், குற்றத்தை ஒப்புக்கொள்வதாகவும் தெரிவித்து வாக்குமூலம் அளித்துள்ளார்.

3)திரு செல்வராஜ், த/பெ.சாமுவேல் என்பவரின் வாக்குமூலம் (3வது எதிரி):

விற்பனையாளர் திரு.செல்வராஜ், த/பெ.சாமுவேல் நாடார் என்பவர் தான் செல்வஜோதி ஸ்டோரில் மாதச்சம்பளத்திற்கு பணிபுரிந்து வருவதாகவும், ஷண்முகா நல்லெண்ணெயை தீபத்திற்கு மட்டும் பயன்படுத்துமாறு பொதுமக்களிடம் கூறி விற்பனை செய்து வந்ததாகவும், தவறான நோக்கில் விற்பனை செய்யவில்லை என்றும், இவ்வழக்கிலிருந்து தன்னை விடுவிக்கும்படியும், மேலும் இவ்வழக்கு

தொடர்பாக அரசு எடுக்கும் முடிவிற்கு கட்டுப்படுவதாகவும் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இந்நேர்வு தொடர்பாக 1, 2 மற்றும் 3 ஆகிய மூன்று எதிரிகளையும் விசாரணை செய்ததின் அடிப்படையிலும், குற்றத்தை ஒப்புக் கொண்டதன் அடிப்படையிலும், வழக்கு ஆவணங்களை கவனமுடன் பரிசீலனை செய்ததன் அடிப்படையிலும் தரம் குறைந்த பொருளினை எதிரிகள் விற்பனை செய்தது உண்மை எனத் தெரியவந்துள்ளதால் விற்பனை செய்த முதல் எதிரி திரு செல்வராஜ் என்பவருக்கு ரூ.5000/-மும்(ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்), கடை உரிமையாளர் திரு செ.லாசர் என்பவருக்கு ரூ.50,000/-மும்(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்), 3வது எதிரி திரு.சந்திரமோகன் என்பவருக்கு ரூ.3,00,000/-மும்(ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) அபராதமாக விதித்து உத்தரவிடப்படுகிறது. மேலும் மேற்படி அபராதத் தொகையை வசூல் செய்து உரிய அரசுக்கணக்கில் செலுத்திடவும், விக்கிரமசிங்கபுரம் மண்டலம், உணவுப் பாதுகாப்பு அலுவலருக்கு இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

13/10/14 3/4

மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும்
கூடுதல் மாவட்ட நீதிபதி, திலி.

பெறுநர்

13.10.14

1)திரு சா.செல்வராஜ், த/பெ.சாமுவேல்நாடார், 2/43ஏ.கோபாலன் பள்ளித்தெரு, ஆறுமுகம்பட்டி.
2)திரு செ.லாசர், 18.எப்.மெயின்ரோடு, அம்பலவாணபுரம், வீ.கே.புரம்-627 425.
3)திரு ரா.சந்திரமோகன், த/பெ.ராஜாராம், 49/3-3ஏ.புல்லுக்கோட்டைரோடு, விருதுநகர்.
4) உணவுப்பாதுகாப்பு அலுவலர், விக்கிரமசிங்கபுரம்.

நகல்: நியமன அலுவலர், உணவுப்பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை, மருத்துவக்கல்லூரி வளாகம், பாளையங்கோட்டை..
நகல்: ண4.பிரிவு இருப்புக் கோப்பிற்கு.